**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.161/2025**

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பவானி | Husband's Name | : | பாலகிருஷ்ணன் |
| Village | : | சேரி | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 55 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 10th day of February 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேரியில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். 1ம் எதிரி என் கணவர், 2ம் எதிரி என் மகன். எனக்கு 2 மகன்கள். மூத்த மகன் பெயர் அரவிந்த்மோகன். அவருக்கு திருமணமாகி சஹானா என்ற பெண் குழந்தை உள்ளது. அவரது மனைவி பெயர் ஜெயபிரதா. நானும் என் மூத்த மகனும் தனித்தனியாக வசித்து வந்தோம். என் மூத்த மகன் மாடியில் வசித்து வந்தான். நானும் என் கணவரும் எங்கள் வீட்டின் தரைதளத்தில் வசித்து வந்தோம். இளைய மகன் மன்னார்குடியில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:34:29 +0530

தனியாக வசித்து வந்தான். என் கணவர் மற்றும் எனது 2 மகன்களும் தனித்தனியாக அரசு Contractor ஆக இருந்து வந்தார்கள். நாங்களும் என் மூத்த மகன் குடும்பமும் தனித் தனியாக இருந்தாலும் ஒற்றுமையாகதான் இருந்தோம். கடந்த 07.05.2025 ம் தேதி இரவு நான் வீட்டிற்குள் இருந்தபோது வெளியில் நின்ற காரை உடைத்த சத்தம் கேட்டது. மாடியிலிருந்த என் மூத்த மகன் அரவிந்த்மோகன் கீழே வந்து ஏன் கார் கண்ணாடியை உடைக்கிறீர்கள் என கேட்டான். காரை ஒரு நபர் உடைத்துக் கொண்டிருந்தார். காரை உடைத்துக் கொண்டிருந்த நபர் அருவாளால் என் மூத்த மகனின் கழுத்தில் ஓங்கி வெட்டியபோது நான் கதவை திறந்துகொண்டு வெட்டாதீங்க, வெட்டாதீங்க என ஓடினேன். நான் குறுக்கே சென்று மறைத்தபோது என் தலையில் அதே அருவாளால் அந்த நபர் வெட்டினார். நான் சத்தம் போட்டதில் மாடியிலிருந்த என் மூத்த மருமகள் கீழே ஓடிவந்தது. அக்கம் பக்கத்தில் இருந்தவர்களும் அங்கு ஓடிவந்தார்கள். உடனே அங்கிருந்த நபர்கள் மன்னார்குடியிலிருந்த என் சின்ன மகன் அருண்மோகனுக்கு போன் செய்யவும் அவர் அங்கிருந்து எங்கள் வீட்டிற்கு காரில் வந்தான். வெட்டுப்பட்டு கிடந்த என் மூத்த மகனையும் என்னையும் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு காரில் ஏற்றி கொண்டு சென்றார்கள். அந்த காரில் எங்களுடன் என் தாய் மாமா ராஜேந்திரன்,

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:34:34 +0530

என் தம்பி செந்தில்குமார், என் அம்மா சந்திரா ஆகியோருடன் என் சின்ன மகன் காரை ஓட்டி சென்றான். என் மூத்த மகனுக்கு காயம் பெரிதாக இருந்ததால் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்த்தோம். அங்கு என் மூத்த மகனுக்கும் எனக்கும் சிகிச்சையளித்தார்கள். விடியற்காலை 4.00 மணியளவில் மருத்துவமனையில் என் மூத்த மகன் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டான். எங்களை வெட்டிய நபர்களை பார்த்தால் சொல்ல முடியும். ஆஜர் எதிரிகள் இருவராலும் என் மூத்த மகனுக்கும் எனக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்தவற்றை சொன்னேன்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் என் மேல் வீட்டின் என்னுடைய மூத்த மகன் வசித்ததாகவும் இளைய மகன் எங்களுடன் கீழ் வீட்டில் இருந்தான் எனவும் இளைய மகனுக்கு தனியாக மன்னார்குடியில் வீடு உள்ளது எனவும் எனது கணவர் ரோடு, பாலம் போன்றவற்றிற்கு உரிமம் எடுத்து காண்டிராக்ட் வேலை செய்து வந்தார் எனவும்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:34:41 +0530

அவருக்கு அதிலிருந்து போதிய வருமானம் வந்தது எனவும் எனது 2 மகன்களும் என் கணவருக்கு துணையாக காண்டிராக்ட் வேலை செய்து வந்தார்கள் எனவும் பின் 2 மகன்களுக்குள்ளும் சொத்துக்களை பிரித்துக் கொள்வது சம்மந்தமாக கடந்த 2 வருடங்களாக பிரச்சனை இருந்து வந்தது எனவும் அதனால் என் கணவருக்கும் என் மகன்களுக்குமிடையே பலமுறை வாக்குவாதம் ஏற்பட்டு சண்டையில் முடிந்துள்ளது எனவும் அப்போதெல்லாம் ஊர்காரர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் சமாதானம் பேசி வைப்பார்கள் எனவும் 2 நாட்களுக்கு முன்பு ஊர் முக்கியஸ்தர்கள் மத்தியில் சமாதானம் பேசப்பட்டு அதனால் அதிக வாக்குவாதம் ஏற்பட்டது எனவும் அதன் தொடர்ச்சியாக புதிய காண்டிராக்ட் எடுப்பது சம்மந்தமாக 2 மகன்களுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது எனவும் அதில் என் கணவர் என் 2 வது மகனுக்கு ஆதரவாக இருந்தார் எனவும் 07.05.2025 ம் தேதி இரவு சுமார் 7.30 மணியளவில் எனது வீட்டில் மனோகர், M.R.கண்ணன் ஆகியோர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது எனவும் கொஞ்ச நேரம் கழித்து பேச வந்தவர்கள் அங்கிருந்து போய்விட்டார்கள் எனவும் அப்போது நானும் என் 2 மருமகள்களும் வீட்டிற்குள்ளிருந்து கேட்டுக் கொண்டிருந்தோம் எனவும் சிறிது நேரத்தில் என் மூத்த மகனும் மருமகளும் குழந்தையை தூக்கி கொண்டு மாடிக்கு

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.10 16:34:47 +0530

சென்றுவிட்டார்கள் எனவும் 2 வது மகன் அவரது மனைவி அட்சயாவை ரூமில் இரு என்ன சண்டை நடந்தாலும் நீ வெளியில் வரக்கூடாது என எச்சரித்து ரூமிற்குள் அனுப்பி விட்டார் எனவும் நான் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தேன் எனவும் என் கணவர் கொல்லைக்கு சென்றவர் வீட்டிற்குள் வந்தார் எனவும் என்னுடைய 2 வது மகன் என் கணவரிடம் அண்ணன் சொன்னபடி கேட்கவில்லையென்றால் மாமா மனோகர் சொன்னபடி செய்ய வேண்டியதுதான் என சொல்ல என் கணவரும் ஆமாம் என சொன்னார் எனவும் அதன்பின்னர் என் புருஷன் மற்றும் 2 வது மகனின் நடவடிக்கையில் மாற்றம் தெரிந்தது எனவும் பின் நாங்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்த போது என் மூத்த மகன் திடீரென்று வீட்டிற்குள் வந்து டி.வி. பக்கத்தில் இருந்த ஒற்றை ஷோபாவில் உட்கார்ந்து கொண்டான் எனவும் என் கணவரும் என் 2 வது மகனும் அவனை வெறித்து பார்த்தார்கள் எனவும் என் கணவர் திடீரென்று என்ன தேவடியா மகனே இங்கே வந்து உன் பொண்டாட்டி உன்னை போக சொன்னாரா என கெட்டை வார்த்தையால் திட்டினான் எனவும் நம்ம பிள்ளையை ஏன் திட்டுறீர்கள் என கேட்டதற்கு என் கணவர் உன் வேலையை பார்த்துட்டு போடி அவனுக்கு சப்போர்ட்டா பேசினால் உன்னையும் போட்டு தள்ளிவிடுவேன் என மிரட்டினார் எனவும் என் மூத்த மகன் ஏன்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:34:52 +0530

இப்படி பேசுகிறீர்கள் நமக்குள் அடித்துக் கொண்டால் நமக்குதான் அசிங்கம் என சொன்னான் எனவும் உடனே என் மூத்த மகன் என் கணவரை பார்த்து என்னடா செவிட்டு பயலே நான் சொல்வது உனக்கு கேட்கவில்லையா தேவடியா பயலே என கெட்ட வார்த்தை சொல்லி என் கணவரின் 2 காதுகளிலும் தன் 2 கைகளால் அறைந்தான் எனவும் அப்போது என் கணவர் கோபத்தின் உச்சிக்கு சென்று அடுப்பங்கரையிலிருந்த அருவாளை எடுக்க ஓடினார் எனவும் என் மூத்த மகன் என் கணவரை பார்த்து என்னால்தான் நீ இவ்வளவு சம்பாதித்தாய் என்னை கொல்வேன் என சொல்கிறாயா என சொல்ல என் கணவர் ஆத்திரப்பட்டு உன்னை கொன்றால்தான் சரியா வருமென்று அடுப்பாங்கரையிலிருந்த அருவாளை எடுத்து வந்து ஷோபாவில் உட்கார்ந்திருந்த மூத்த மகனை அவன் எதிர்பார்க்காத நேரத்தில் படார் படாரென வேகமாக அருவாளால் பலமுறை மண்டை, முகம், கழுத்து, தோள்பட்டை ஆகியவற்றில் கண் இமைக்கும் நேரத்திற்குள் வெட்டிவிட்டார் எனவும் என் மூத்த மகன் அப்பா வெட்டாதீங்க, வெட்டாதீங்க என சத்தம் போட்டான் எனவும் நான் ஏன்டா வெட்டுறீங்க வெட்டாதீங்க என சத்தம் போட்டேன் எனவும் நாங்கள் போட்ட சத்தம் கேட்டு ஓடிவந்த என் மூத்த மருமகள் வீட்டிற்குள் எட்டிப் பார்த்தார் எனவும் அந்த நேரத்தில் ஷோபாவில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:34:58 +0530

உட்கார்ந்திருந்த என் மகனை என் கணவர் ஷோபாவின் கைபிடியில் ஏறி உட்கார்ந்துகொண்டு மாறி மாறி வெட்டினார் எனவும் என் மூத்த மகன் அப்படியே எழுந்திருக்க முடியாமல் விழுந்துவிட்டான் எனவும் அந்த நேரத்தில் என் 2 வது மகனும் அருவாளை வாங்கி என் மூத்த மகனை வெட்டினான் எனவும் நான் 2 பேரிடமும் வெட்டாதீங்கடா என கதறியபோது என் கணவர் என்னை பார்த்து இந்த தேவடியா முண்டை கொடுக்குற இடத்தால்தான் இவன் இப்படி செய்கிறான் நீயும் உன் மூத்த மகனோடு ஒழிந்துபோ என கத்திக்கொண்டு அருவாளால் என் தலையில் வெட்டினார் எனவும் அய்யோ வெட்டாதீங்க என கத்திக்கொண்டு வந்த என் மூத்த மருமகளை என் 2 வது மகன் பிடித்து கீழே தள்ளிவிட்டான் எனவும் என் 2 வது மகன் என் கணவரை பார்த்து இந்த தேவடியாவை கொல்லுங்கப்பா என ஆவேசமாக கத்திக்கொண்டு இந்த தேவடியாவையும் கொன்னால்தான்டி சரிவரும் நீயும் செத்து போடி என சொல்லி அவர் தலையில் வெட்டினார் எனவும் தடுத்த என் மூத்த மருமகளின் சுண்டு விரலில் பட்டு அவருக்கு காயம் ஏற்பட்டது எனவும் நாங்கள் சத்தம் போடுவதை கேட்டு அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் யாரும் வரவில்லை எனவும் எனது கணவர் கையிலிருந்த அருவாளை என் 2 வது மகனிடம் கொடுத்து நீ பார்த்துக்கொள் என சொல்ல எனது மூத்த

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:35:03 +0530

மருமகளை என் 2 வது மகன் அருவாளுடன் துரத்திக்கொண்டு போனான் எனவும் என் மூத்த மருமகள் அவளை காப்பாற்றிக்கொள்ள அருகிலிருந்த ரூமிற்குள் சென்று கதவை சாத்திக்கொண்டால் எனவும் அப்போது என் கணவர் அடுப்பாங்கரையிலிருந்த அருவாள் மனையை எடுத்துவந்து என் மூத்த மருமகளை வெட்ட பார்த்தார் எனவும் அவர் கதவை திறக்காததால் ஆத்திரத்தில் மறுபடியும் என் கணவர் மூத்த மகனை அருவாள்மனையால் மாறி மாறி கை, முகம் ஆகிய இடங்களில் வெட்டினார் எனவும் பிறகு கதவை திறந்து கொண்டு வந்த என் மூத்த மருமகள் கீழே கிடந்த என்னை தூக்கினார் எனவும் என் மூத்த மகன் ஷோபாவில் தலைகுப்புற கிடந்தான் எனவும் வெளியே ஓடிய என் 2 வது மகன் ஹாலுக்கு வந்தான் எனவும் நானும் என் மூத்த மருமகளும் அவன் காலில் விழுந்து உன் அண்ணனை காப்பாற்றுடா என சொன்னோம் எனவும் என் கணவர் நடந்ததை யாரிடமும் சொல்லக்கூடாது நான் போலீசில் சரணடைய போகிறேன் எனவும் 2 வது மகனை பற்றியும் எதுவும் சொல்லக்கூடாது என சொல்லிவிட்டு சென்றுவிட்டார் எனவும் பின் தகவல் கேள்விபட்டு கண்ணன், M.R.ராஜேந்திரன் இருவரும் வீட்டிற்கு வந்து விட்டார்கள் எனவும் நான் அவர்கள் உதவியுடன் இரவு 11.30 மணியளவில் என் வீட்டிலிருந்த காரில் என் மூத்த மகனை நானும் என் மூத்த மருமகளும் கண்ணன்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:35:10 +0530

மற்றும் M.R ஆகியோரும் என் 2 வது மகன் காரை ஓட்ட அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தோம் எனவும் ஆஸ்பத்திரிக்குள் என் 2 வது மகன் வரவில்லை எனவும் டாக்டர்களிடம் என் கணவர் என் மகனை வெட்டிவிட்டார் என சொன்னேன் எனவும் என் மகன் சீரியஸாக இருந்ததால் அவனை தஞ்சாவூர் கொண்டுபோக சொன்னார்கள் எனவும் அதன்படி என் மகனை தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்த்தோம் எனவும் என் 2 வது மகன் தலைமறைவாகிவிட்டான் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் எனவும் 08.05.2025 ம் தேதி சிகிச்சையிலிருந்த என் மூத்த மகன் விடியற்காலை 4.30 மணிக்கு மருத்துவமனையில் இறந்துவிட்டதாக சொன்னார்கள் எனவும் என் 2 வது மருமகள் அட்சயாவையும் அவரது குழந்தையும் அட்சயாவின் தகப்பனார் இரவோடு இரவாக கூட்டிக்கொண்டு போய் விட்டார் எனவும் இவ்வளவு பிரச்சனை நடந்தபோதும் அட்சயா வீட்டிலிருந்த ரூமிற்குள்தான் இருந்தாள் எனவும் அவள் தடுப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை எனவும் என் மூத்த மருமகளும் அவரது உறவினர்களும் போலீசில் புகார் கொடுக்க சென்று விட்டார்கள் எனவும் என் மூத்த மருமகள் கொடுத்த புகாரின் பேரில் என்னை விசாரித்தார்கள் எனவும் என் புருஷன் என் மூத்த மகனையும், என்னையும், என் மூத்த

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:35:17 +0530

மருமகளையும் வெட்டிய அருவாளை என் வீட்டின் கொல்லையில் வைத்து போலீசார் காட்டினார்கள் எனவும் அந்த அருவாளை நான் அடையாளம் காட்டினேன் எனவும் போலீசார் என்னை வீட்டில் விசாரித்தார்கள் எனவும் பின்னர் வீட்டின் கொல்லைபுறத்திலிருந்து இரத்தம் படிந்த டைல்ஸ் கல்லை போலீசார் விசாரணைக்காக உடைத்து எடுத்து சென்றார்கள் எனவும் என் கணவர் போட்டிருந்த மெருன்-வெள்ளை நிறத்தில் கட்டம் போட்ட துண்டு, Brown கலர் கைலி ஆகியவற்றை போலீசார் எடுத்து சென்றார்கள் எனவும் பின்னர் மறுபடியும் 18.05.2025 ம் தேதி என்னை போலீசார் விசாரித்தார்கள் எனவும் அப்போது என் கணவரை போலீஸ் காவலில் எடுத்து வீட்டிற்கு கூட்டி வந்தார்கள் எனவும் நான் அவரை பார்க்க விரும்பாமல் வீட்டின் கொல்லையில் இருந்துவிட்டேன் எனவும் என் கணவர் என் மூத்த மகனை வெட்டிய அருவாமனையை வீட்டின் அடுப்பங்கரையிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார் எனவும் போலீசார் என்னை விசாரித்தபோது என் கணவர் 2 வது மகனை பற்றி யாரிடமும் எதுவும் சொல்லக்கூடாது என சொன்னதன் பேரில் நான் முதல் விசாரணையில் போலீஸ் மற்றும் ஆஸ்பத்திரியில் சொல்லவில்லை எனவும் 16.05.2025 ம் தேதி என் கணவர் போலீசாரிடம் உண்மையை சொல்லிவிட்டார் எனவும் அவர் சொன்னதன் அடிப்படையில் நான் போலீசாரிடம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:35:23 +0530

சொல்லியுள்ளேன் என்றால் தவறு. என் மூத்த மருமகள் போன் செய்ய வேண்டி மாடிக்கு சென்றதால் என் கணவர், என் மூத்த மகனை அருவாமனையால் வெட்டிய விஷயம் என் மூத்த மருமகளுக்கு தெரியாது எனவும் எனது மூத்த மகனை என் கணவரும் என் 2 வது மகனும் மாறி மாறி அருவாளாலும் என் கணவர் அருவாமனையாலும் வெட்டியதால்தான் என் மூத்த மகன் இறந்துவிட்டான் என்ற விபரத்தை போலீசார் என்னை மறுவிசாரணை செய்தபோது சொல்லியுள்ளேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிகள் என் கணவர் மற்றும் மகன் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)**

என் கணவருடம் என் குடும்பம், என் மூத்த மகன் குடும்பம், என் இளைய மகன் குடும்பம் ஆகியோர் தனித்தனியாக தனி சமையல் செய்யப்பட்டு வசித்து வருகிறோம் என்றால் சரி. என் வீட்டுக்காரர்தான் சொத்துக்கள் அனைத்தையும் சம்பாதித்தார் என்றால் ஆமாம். 2 மகன்களுக்கும் என் கணவர் காண்டிராக்ட் செய்வதற்கு தனித்தனியா கம்பெனி வைத்து கொடுத்து அவர்களுக்கு என் கணவர்தான் முதலீடு செய்து வருகிறார் என்றால் ஆமாம். நானும் என் மூத்த மகனும் வெட்டுப்பட்ட இடம் என்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:35:28 +0530

வீட்டிற்கு வெளியே கோலம் போடும் இடம், காரின் அருகில் நடந்தது என்றால் சரி. கோலம் போடும் இடத்தில்தான் என் மூத்த மகன் கீழே விழுந்தான். அந்த இடத்தில்தான் இரத்தம் சிந்தி கிடந்தது என்றால் சரி. நானும் என் மூத்த மகனும் வெட்டுப்பட்ட பிறகுதான் மாடியிலிருந்த என் மூத்த மருமகளை கூப்பிட்டு வந்தேன். அதன்பின்தான் என் மூத்த மருமகள் அந்த இடத்திற்கு வந்தது. எனது 2 மகன்களுக்கும் என் கணவர் மற்றும் எனக்கும் எந்த கருத்து வேறுபாடும் கிடையாது என்றால் சரி. எங்கள் வீட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளை என் கணவர் மற்றும் என் 2 மகன்களுடன்தான் நடத்துவோம்.

**குறுக்கு விசாரணை (2 ம் எதிரி தரப்பில்)**

என் வீட்டுக்காரர் வைத்திருக்கும் Construction பெயர் BBA என்பதாகும். என் மூத்த மகன் வைத்திருக்கும் Construction பெயர் Delta Engineer என்பதாகும். என் இளைய மகன் வைத்திருக்கும் Construction பெயர் AMA Construction ஆகும். என் இளைய மகனின் குழந்தை பெயர் அஷ்விகா. அஷ்விகாவின் பிறந்த தேதி 10.04.2024 என்றால் சரி. 10.04.2025 அன்று அஷ்விகாவின் பிறந்த நாள் எங்கள் வீட்டில் கொண்டாடப்பட்டது. அந்த விழாவில் என் மூத்த மகன், என் இளைய மகனின் குழந்தைக்கு பரிசாக சைக்கிள் பரிசாக கொடுத்தான். என்னிடம் காட்டப்படும்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.10 16:35:33 +0530

போட்டோவில் உள்ளது அதுதான். அந்த போட்டோ **எ.சா.ஆ.1**. 22.02.2024 ம் தேதி என்னுடைய மூத்த மகன் என் இளைய மகனின் மனைவி அட்சயாவின் வளைகாப்பிற்கு பொட்டு வைக்கிறார் என்றால் சரி. என்னிடம் காட்டப்படும் போட்டோ **எ.சா.ஆ.2**. தஞ்சாவூர் மீனாட்சி ஆஸ்பத்திரியில் உறுதிமொழி பத்திரத்தில் எல்லாம் என் இளைய மகன்தான் கையெழுத்து செய்தார் என்றால் சரி. என் இளைய மகனின் நண்பர்கள் எல்லோரும் இளைய மகன் கேட்டுக் கொண்டதற்கிணங்க தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை கணக்கிற்கு மருத்துவ செலவிற்காக ரூ.50,000/-, ரூ.50,000/- என பணம் ஏற்றிவிட்டார்கள் என்றால் சரி. அன்றைய தினம் முழுதும் என் இளைய மகன் மீனாட்சி மருத்துவமனையில்தான் இருந்தார் என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:35:39 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.161/2025

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கண்ணன் | Father's Name | : | சாமியப்பன் |
| Village | : | மேலச்சேரி | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 55 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 10th day of February 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேலச்சேரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். 1ம் எதிரி என் நண்பர். நாங்கள் இருவரும் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள். 07.05.2025ம் தேதி இரவு மழவராயநல்லூர் மாரியம்மன்கோவில் திருவிழாவிற்கு செல்லும்போது பாலகிருஷ்ணன் வீட்டில் ஒரே சத்தமாக இருந்தது. நான் போய் பார்த்தபோது வெட்டுப்பட்டு கிடந்த அரவிந்த் மோகனை அவரது சகோதரரான 2ம் எதிரி காரில் ஏற்றிகொண்டு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.10 16:35:55 +0530

போனார்கள். அந்த காரை பின்தொடர்ந்து நான், வெட்டுப்பட்டவரின் மனைவி, M.ராஜேந்திரன் ஆகியோர் காரில் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். பின் மேல் சிகிச்சைக்காக காயம்பட்ட நபர்களை மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள், நானும் உடன் சென்றேன். பாலகிருஷ்ணனும் அவரது இளைய மகனும் யாரோ வெட்டிவிட்டு ஓடியதாக என்னிடம் சொன்னார்கள். காயம்பட்டவர்களுக்கு யாரால் காயம் ஏற்பட்டது என்று நான் விசாரிக்கவில்லை. போலீசார் விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் நானும் 1ம் எதிரியும் நண்பர்கள் எனவும் 1ம் எதிரி மற்றும் அவரது மகன்களான அரவிந்த்மோகன், அருண்மோகன் எல்லோரும் கூட்டு குடும்பமாக வசித்து வந்தார்கள் எனவும் அவரது வீட்டு விசேஷங்கள், தொழில் தொடர்பான விஷயங்களை என்னிடமும் எங்கள் ஊரைச் சேர்ந்த M. ராஜேந்திரனிடமும் கலந்து ஆலோசிப்பார் எனவும் கடந்த 2 வருடங்களாக 1ம் எதிரியின் 2 மகன்களுக்குமிடையே தொழில் போட்டி ஏற்பட்டது எனவும் மூத்த மகன் தனியாக

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:36:01 +0530

காண்டிராக்ட் வேலையை செய்ய ஆரம்பித்தார் எனவும் 1, 2 எதிரிகள் சேர்ந்து தனியாக காண்டிராக்ட் எடுத்து வேலை செய்து வந்தார்கள் எனவும் அரவிந்த்மோகனின் மனைவி ஜெயபிரதாவின் சகோதரியை அருண்மோகனுக்கு திருமணம் செய்ய பேச்சுவார்த்தை நடந்ததாகவும் அதில் ஜெயபிரதாவின் வீட்டில் ஒரே வீட்டில் மற்றொரு மகளை கொடுக்க சம்மதிக்கவில்லை எனவும் அருண்மோகனுக்கு வேறு இடத்தில் திருமணம் செய்தார்கள் எனவும் அரவிந்த்மோகனும் அருண்மோகனும் மன்னார்குடியில் தனித்தனியாக வீடு வாங்கி கொண்டார்கள் எனவும் அதனால் அண்ணன் தம்பிக்கிடையே சொத்து பிரித்துக் கொள்ளலாம் எனவும் 1ம் எதிரி சொத்தை பிரிக்க வேண்டாம் தொழில் செய்ய எவ்வளவு வேண்டுமானாலும் பணம் தருகிறேன் என சொன்னார் எனவும் அதற்கு அரவிந்த் மோகன் உடன்படவில்லை எனவும் இதனால் 1ம் எதிரி மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானார் எனவும் 07.05.2025ம் தேதி மன்னார்குடி சேர்மனுடன் பாலகிருஷ்ணன், அவரது இரு மகன்கள் ஆகிய நால்வரும் சொத்து பிரிப்பது சம்மந்தமாக பேசினார்கள் எனவும் அவர் பேசிவிட்டு போனபின் இரவு 10.30 மணியளவில் 2 எதிரிகளும் சேர்ந்து அரவிந்த்மோகனை அருவாள் மற்றும் அருவாமனையாள் வெட்டிவிட்டார்கள் எனவும் செய்தி கேள்விபட்டு இரவு 11.00 மணியளவில் நான் சென்று பார்த்தபோது 1ம் எதிரி தான்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:36:06 +0530

போட்டிருந்த வேஷ்டி, சட்டையெல்லாம் இரத்தக் கறையுடன் பதட்டத்துடன் காணப்பட்டார் எனவும் 2ம் எதிரி அருவாளை எடுத்துபோய் தோட்டத்தில் வீசியிருந்தார் எனவும் 1ம் எதிரி தான் போலீஸ் ஸ்டேஷனுக்கு போவதாக சொல்லிவிட்டு சென்று விட்டார் எனவும் அங்குவந்த M.R.டன் நான் வீட்டிற்கு சென்று பார்த்தபோது அரவிந்த் மோகன் இரத்த வெள்ளத்தில் ஷோபாவின் அருகில் கிடந்து காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என முனகி கொண்டிருந்தார் எனவும் நானும் M.R, அரவிந்த்மோகனின் மனைவி ஜெயபிரதாவும் அருண்மோகனை கெஞ்சி கூத்தாடி தலையில் இரத்தக் காயத்துடன் காணப்பட்ட பவானி மற்றும் அரவிந்த்மோகன் இருவரையும் அருண்மோகனின் காரில் ஏற்றி மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம் எனவும் பின் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை கொண்டு சேர்த்தோம் எனவும் அருண்மோகன் மற்றும் அவரது மனைவி தலைமறைவாகி விட்டார்கள் எனவும் அரவிந்த்மோகனை யார் வெட்டியது என பவானியிடம் கேட்டபோது ஒரு சமயத்தில் பாலகிருஷ்ணனும் அருண்மோகனும் சேர்ந்து வெட்டினார்கள் எனவும் பின்னர் தன் கணவர்தான் வெட்டினார் என மாறி மாறி சொன்னார் எனவும் ஜெயபிரதாவிடம் கேட்டபோது அப்பாவும் மகனும் சேர்ந்துதான் தன்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:36:12 +0530

கணவரை திட்டம்போட்டு நயவஞ்சகமாக வெட்டி விட்டார்கள் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. 1ம் எதிரி என் கட்சிகாரர் என் நண்பர் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)**

எங்கள் ஊரில் தொடர்ந்து நான் 4 முறையும் என் மனைவி ஒரு முறையும் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தோம் என்றால் சரி. ஊரில் நடைபெறும் அனைத்து விசேஷங்களையும் நாங்கள் கலந்துகொள்வோம். பாலகிருஷ்ணனின் வீடு என் வீட்டுக்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரி. பாலகிருஷ்ணன் வீட்டு விஷயம் முழுவதும் எனக்கு தெரியும். பாலகிருஷ்ணன் மற்றும் அவரது 2 மகன்களிடையே சொத்து சம்மந்தமாக எந்த பிரச்சனையும் நடந்தது கிடையாது என்றால் சரி. இவ்வழக்கில் இறந்த அரவிந்த்மோகனும் அவரது மனைவியும் அதே வீட்டின் மேல் வீட்டில் தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் ஆமாம். 2 மகன்களுக்கும் பாலகிருஷ்ணன்தான் காண்டிராக்ட் தொழில் செய்வதற்கு பண உதவி மற்றும் பொருளுதவி செய்து வருகிறார் என்றால் சரி.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:36:18 +0530

**குறுக்கு விசாரணை (2 ம் எதிரி தரப்பில்)**

அருண்மோகன் 2023 லிருந்து மன்னார்குடி RP சிவம் நகரில் தனியாக குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்றால் சரி. மன்னார்குடி RP சிவம் கீழச்சேரியிலிருந்து 10 கி.மீ. தொலைவில் இருக்குமென்றால் சரி. மன்னார்குடி RP சிவம் நகரிலிருந்து கீழசேரி கிராமத்திற்கு காரில் 10 / 15 நிமிடங்களில் வந்துவிடலாம் என்றால் சரி. காயம்பட்ட அரவிந்த்மோகனையும் பவானியையும் காப்பாற்ற வேண்டுமென மன்னார்குடி அரசு மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை ஆகிய 2 மருத்துவமனைகளிலும் சேர்த்து அனைத்து முயற்சிகளையும் செய்தது அருண்மோகன்தான் என்றால் சரி. எங்கள் ஊரில் எந்த பிரச்சனையாக இருந்தாலும் கோட்டூர் போலீசார் என்னைதான் விசாரிப்பார்கள் என்றால் ஆமாம். சம்பவத்தன்று நான் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையிலிருந்தபோது கோட்டூர் ஆய்வாளர் அங்கு வந்து விட்டார், அங்கு வைத்து என்னை விசாரித்தபோது யாரோ இருட்டில் கார் கண்ணாடியை உடைத்துவிட்டு அரவிந்த்மோகனையும் பவானியையும் வெட்டி காயப்படுத்திவிட்டு சென்று விட்டார்கள் என ஆய்வாளரிடம் சொன்னேன். இறந்தவரின் மனைவி காவல் ஆய்வாளரிடம் இதைதான் சொன்னார், அவர் காவல் ஆய்வாளரிடம் சொல்லும்போது

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:36:25 +0530

நள்ளிரவு 2.00 மணியிருக்கும். அவர் சொன்னதை காவல் ஆய்வாளர் எழுதி கொண்டார். பெரிய மருமகளிடம் ஆய்வாளர் கையொப்பம் வாங்கினார் என்றால் சரி. தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் அரவிந்த்மோகனை காப்பாற்றுவதற்காக தன் கணக்கு மற்றும் தன் நண்பர்களின் கணக்கிலிருந்து பணம் வாங்கினார் என்றால் சரி. அருண்மோகனும் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில்தான் இருந்தார் என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:36:31 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.161/2025

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜேந்திரன் | Father's Name | : | மேகவர்ணம் |
| Village | : | கீழச்சேரி | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 75 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 10th day of February 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கீழச்சேரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் மற்றும் ஒப்பந்த தொழில் செய்து வருகிறேன். 1ம் எதிரி எனக்கு தம்பி முறை வேண்டும். 1ம் எதிரியின் வீடு என் வீட்டிலிருந்து 300 மீட்டர் தள்ளி உள்ளது. கடந்த 07.05.2025 ம் தேதி இரவு 10.30 மணியளவில் பாலகிருஷ்ணன் வீட்டில் அழுகையும் சத்தமுமாக இருந்தது. நான் போய் பார்த்தபோது அரவிந்த்மோகன் வெட்டுப்பட்டு கிடந்தார். பவானிக்கு நெற்றியில் இரத்தக் காயம் இருந்தது. அவர்கள் இருவரையும் அருண்மோகனின் காரில்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.10 16:36:38 +0530

ஏற்றி மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்று பின் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் சேர்த்தோம். எவ்வாறு காயம் ஏற்பட்டது என பவானியிடம் கேட்டபோது யாரோ ஒருவர் வெட்டிவிட்டு ஓடிவிட்டதாக சொன்னார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் நானும் 1ம் எதிரியும் நண்பர்கள் எனவும் 1ம் எதிரி மற்றும் அவரது மகன்களான அரவிந்த்மோகன், அருண்மோகன் எல்லோரும் கூட்டு குடும்பமாக வசித்து வந்தார்கள் எனவும் அவரது வீட்டு விசேஷங்கள், தொழில் தொடர்பான விஷயங்களை என்னிடமும் எங்கள் ஊரைச் சேர்ந்த கண்ணனுடனும் கலந்து ஆலோசிப்பார் எனவும் கடந்த 2 வருடங்களாக 1ம் எதிரியின் 2 மகன்களுக்குமிடையே தொழில் போட்டி ஏற்பட்டது எனவும் மூத்த மகன் தனியாக காண்டிராக்ட் வேலையை செய்ய ஆரம்பித்தார் எனவும் 1, 2 எதிரிகள் சேர்ந்து தனியாக காண்டிராக்ட் எடுத்து வேலை செய்து வந்தார்கள் எனவும் அரவிந்த்மோகனின் மனைவி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:36:44 +0530

ஜெயபிரதாவின் சகோதரியை அருண்மோகனுக்கு திருமணம் செய்ய பேச்சுவார்த்தை நடந்ததாகவும் அதில் ஜெயபிரதாவின் வீட்டில் ஒரே வீட்டில் மற்றொரு மகளை கொடுக்க சம்மதிக்கவில்லை எனவும் அருண்மோகனுக்கு வேறு இடத்தில் திருமணம் செய்தார்கள் எனவும் அரவிந்த்மோகனும் அருண்மோகனும் மன்னார்குடியில் தனித்தனியாக வீடு வாங்கி கொண்டார்கள் எனவும் அதனால் அண்ணன் தம்பிக்கிடையே சொத்து பிரித்துக் கொள்ளலாம் எனவும் 1ம் எதிரி சொத்தை பிரிக்க வேண்டாம் தொழில் செய்ய எவ்வளவு வேண்டுமானாலும் பணம் தருகிறேன் என சொன்னார் எனவும் அதற்கு அரவிந்த் மோகன் உடன்படவில்லை எனவும் இதனால் 1ம் எதிரி மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானார் எனவும் 07.05.2025ம் தேதி மன்னார்குடி சேர்மனுடன் பாலகிருஷ்ணன், அவரது இரு மகன்கள் ஆகிய நால்வரும் சொத்து பிரிப்பது சம்மந்தமாக பேசினார்கள் எனவும் அவர் பேசிவிட்டு போனபின் இரவு 10.30 மணியளவில் 2 எதிரிகளும் சேர்ந்து அரவிந்த்மோகனை அருவாள் மற்றும் அருவாமனையாள் வெட்டிவிட்டார்கள் எனவும் செய்தி கேள்விபட்டு இரவு 11.00 மணியளவில் நான் சென்று பார்த்தபோது 1ம் எதிரி தான் போட்டிருந்த வேஷ்டி, சட்டையெல்லாம் இரத்தக் கறையுடன் பதட்டத்துடன் காணப்பட்டார் எனவும் 2ம் எதிரி அருவாளை எடுத்துபோய் தோட்டத்தில் வீசியிருந்தார்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:36:51 +0530

எனவும் 1ம் எதிரி தான் போலீஸ் ஸ்டேஷனுக்கு போவதாக சொல்லிவிட்டு சென்று விட்டார் எனவும் அங்குவந்த கண்ணனுடன் நான் வீட்டிற்கு சென்று பார்த்தபோது அரவிந்த் மோகன் இரத்த வெள்ளத்தில் ஷோபாவின் அருகில் கிடந்து காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என முனகி கொண்டிருந்தார் எனவும் நான், கண்ணன், அரவிந்த்மோகனின் மனைவி ஜெயபிரதா ஆகியோர் அருண்மோகனை கெஞ்சி கூத்தாடி தலையில் இரத்தக் காயத்துடன் காணப்பட்ட பவானி மற்றும் அரவிந்த்மோகன் இருவரையும் அருண்மோகனின் காரில் ஏற்றி மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம் எனவும் பின் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை கொண்டு சேர்த்தோம் எனவும் அருண்மோகன் மற்றும் அவரது மனைவி தலைமறைவாகி விட்டார்கள் எனவும் அரவிந்த்மோகனை யார் வெட்டியது என பவானியிடம் கேட்டபோது ஒரு சமயத்தில் பாலகிருஷ்ணனும் அருண்மோகனும் சேர்ந்து வெட்டினார்கள் எனவும் பின்னர் தன் கணவர்தான் வெட்டினார் என மாறி மாறி சொன்னார் எனவும் ஜெயபிரதாவிடம் கேட்டபோது அப்பாவும் மகனும் சேர்ந்துதான் தன் கணவரை திட்டம்போட்டு நயவஞ்சகமாக வெட்டி விட்டார்கள் என 14.05.2025 ம் தேதி போலீசார் என்னை விசாரித்தபோது சொல்லியும் பின்னர் 18.05.2025 ம் தேதி போலீசார்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:36:57 +0530

என்னை விசாரித்தபோது அரவிந்த்மோகனை சிகிச்சைக்கு சேர்த்த அருண்மோகனை தேடியபோது அவர் தலைமறைவாகி விட்டார் எனவும் அதனால் நான் அந்த மருத்துவமனையில் உள்ள பதிவேட்டில் சிகிச்சைக்கு சேர்த்ததாக கையெழுத்து போட்டேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. 1ம் எதிரி என் கட்சிகாரரர் என் நண்பர் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)**

நான் அ.சா.1 பவானியின் தாய் மாமா என்றால் சரி. பவானி வீட்டிற்கு பக்கத்தில் 300 மீட்டர் தொலைவில் என் வீடும் உள்ளது. 1ம் எதிரியின் குடும்ப விஷயங்கள் எல்லாம் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். பாலகிருஷ்ணன் அவரது மகன்கள் அரவிந்த்மோகன், அருண்மோகன்ஆகியோர் தனித்தனியாக குடும்பத்துடன் வசித்தார்கள் என்றால் சரி. அரவிந்த்மோகன் பாலகிருஷ்ணனின் வீட்டின் மேல் மாடியில் தனி ரேஷன் கார்ட் மற்றும் தனி சமையல் செய்து வசித்து வந்தார்கள். 2ம் எதிரி அருண்மோகன் மன்னார்குடியில் வாடகை வீட்டில் தனியாக வசித்து வருகிறார். பாலகிருஷ்ணன், அவரது மகன்கள் அரவிந்த்மோகன், அருண்மோகன் மூவரும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:37:03 +0530

தனித்தனியாக காண்டிராக்ட் தொழில் செய்து வருகிறார்கள் என்றால் சரி. பொங்கல், தீபாவளி மற்றும் குடும்பத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளை எல்லோரும் ஒன்றாக கொண்டாடுவார்கள். பாலகிருஷ்ணன்தான் அவரது 2 மகன்களுக்கும் பொருளாதார வசதியை செய்து வந்தது என்றால் சரி. காயம்பட்ட இடத்தில் அரவிந்த்மோகனுக்கும் அவரது தாயார் பவானிக்கும்தான் காயம் என்றால் ஆமாம்.

**குறுக்கு விசாரணை (2 ம் எதிரி தரப்பில்)**

பாலகிருஷ்ணன் குடும்பத்தில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளிலும் நான்தான் முக்கியமாக நிற்பேன் என்றால் சரி. 10.04.2025 ம் தேதி அருண்மோகனின் குழந்தையின் பிறந்த நாள் நிகழ்ச்சிக்கு சென்றிருந்தேன். என்னிடம் காட்டப்படும் போட்டோ **எ.சா.ஆ.3**. அருண்மோகன் மன்னார்குடி RP சிவம் நகரில் மனைவியுடன் தனியாக வசித்து வருகிறார் என்றால் சரி. ஏதாவது தேவையென்றால் வந்துவிட்டு அன்றைய தினம் இரவே அவரது வீட்டிற்கு சென்று விடுவார். சம்பவம் கேள்விபட்டு அருண்மோகன் மன்னார்குடி RP சிவம் நகரிலிருந்து கீழச்சேரி வந்து காயம்பட்ட அரவிந்த்மோகன் மற்றும் பவானியை மன்னார்குடி அரசு மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரி. அரவிந்த்மோகனுக்கான உறுதி மொழி பத்திரத்தில் அருண்மோகன்தான் கையெழுத்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:37:09 +0530

போட்டார் என்றால் சரி. அரவிந்த்மோகனுக்கான மருத்துவ செலவுகளை தன் கணக்கிலும் தன் நண்பர்கள் கணக்கிலிருந்தும் அவர்தான் செலுத்தினார் என்றால் சரி. அன்றைய தினம் இரவு அருண்மோகன், அரவிந்த்மோகனை காப்பாற்றுவதற்காக தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையிலிருந்து படாதபாடு பட்டார் என்றால் சரி. நானும் சாட்சி கண்ணனும் ஊரின் முக்கியஸ்தர்கள் என்றால் சரி. சம்பவம் கேள்விபட்டு தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு கோட்டூர் போலீசார் வந்து ஊராட்சி மன்ற தலைவர் கண்ணன், பெரிய மகனின் மனைவியையும் விசாரித்தார்கள் என்றால் சரி. கார் கண்ணாடியை உடைத்துவிட்டு இருட்டில் யாரோ முகம் தெரியாத நபர்கள் அரவிந்த் மோகனையும் பவானியையும் வெட்டிவிட்டு சென்றார்கள் என் சொன்னார்கள் என்றால் சரி. அவர் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக் கொண்டார்கள், அரவிந்த்மோகனின் மனைவியிடம் போலீசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:37:14 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.